2013 மார்ச் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்பாரற்றுக் கிடந்த இந்தத் துறைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் புத்துயிர் அளித்து, மிக அதிகமான முக்கியத்துவம் அளித்து வருகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப் போன்று, அந்தப் பகுதியில் விடுதிகள் அமைக்கத் தேவை ஏற்படுமானால், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஒப்புதலுடன் ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், இனுங்கூர் கிராமத்தில் விடுதி ஒன்றை ஏற்படுத்துவதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்கள்.

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளியிலே இடவசதி இருப்பதால் மாண்புமிகு அம்மா அவர்களின் கருணையோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு பரிசீலித்து அதை செய்து கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு, நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 104, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

104—

திருப்பணி

***20361—திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, திருநாவலூர் ஒன்றியம், பாதூர் கிராமத்திலுள்ள அருள்மிகு ஸ்ரீ கிருஷ்ணன் திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், பாதூர் கிராமம், அருள்மிகு வேணுகோபாலசாமி என்கிற ஸ்ரீ கிருஷ்ணன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சட்டப் பிரிவு 49(1)–ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட பட்டியலைச் சேராத ஒரு சிறிய திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு வருமானம் ஏதும் இல்லை. ஒரு கால பூஜை திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற்று பூஜைகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றபின் ஒரு கால பூஜை திட்டத்தின்கீழ் உதவிபெறும் திருக்கோயில் மைய நிதியுதவியை ரூ.25,000/–லிருந்து ரூபாய் ஒரு இலட்சமாக உயர்வு செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) அதனை முதலீடு செய்து வரும் வட்டித் தொகையிலிருந்து ஒரு கால பூஜை சிறப்பாக நடைபெற ஆணையிட்டிருக்கின்றார்கள்.

இத்திருக்கோயிலுக்கு ஊர்ப் பொது மக்கள் மூலமாக தற்போது சன்னதி கட்டப்பட்டுள்ளது. வண்ணப் பூச்சு வேலைகள் மற்றும் தரைதளப் பணிகள் மட்டும் செய்ய வேண்டியுள்ளது. இப்பணிகளுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஒப்புதலோடு நிதியுதவி வழங்கப்பட்டு, திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு, விரைவிலே குடமுழுக்கு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியோடு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை மத்திய

2013 மார்ச் 28]

அரசிதழில் இடம் பெறச் செய்ய உச்ச நீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் நடத்தி வெற்றி வாகை சூடி, தமிழக விவசாயிகளைக் காப்பாற்றிய காவேரித் தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) செந்தமிழன் இரத்தம் குடித்த சிங்களவன் கூட்டத்தைத் தமிழகத்தின் எல்லைக்குள்ளே தடம் பதிக்க விடமாட்டேன் என வீறுகொண்டு எழுந்திட்ட வீரத்தின் விளைநிலமே, தமிழக தனி மனித இராணுவமே, ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானத்தை நேற்று சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றிய உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவியாக விளங்கும் நாளைய பாரதமே, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட பாதூர் கிராமத்திலுள்ள அருள்மிகு கிருஷ்ணன் திருக்கோயில் கடந்த 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. இத்திருக்கோயில் 1993 ஆம் ஆண்டு குடமுழுக்கு செய்யப்பட்டு, சுமார் 20 வருடங்கள் ஆகின்றன. அதன் பிறகு அந்தத் திருக்கோயில் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாமல் இருந்த காரணத்தினால், அந்த ஊர் மக்கள் சேர்ந்து, அந்தக் கோயில் திருப்பணிகளைச் செய்து வருகிறார்கள். அந்தக் கோயிலுக்குப் பண வசதி இல்லாத காரணத்தினால், ஒரு கால பூஜை செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டு, அந்த ஒரு கால பூஜை இப்போது சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்போது மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் வருங்காலத்திலே நிதி ஒதுக்கீடு செய்து, குடமுழுக்கு செய்யப்படும் என்று அறிவித்தமைக்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 105, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*